குற்ற வழக்குத் தொடர்வுத் துறை

சென்னை குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணைகள்

முன்னிலை : திருமதி.கோ.சித்ரா தேவி,எம்.ஏ.,பி.எல்.,

ந.க. எண். 4642 /குவதொ/அ2/2021 நாள் . 14/12/2021

(இயக்கக ஆணை எண். 118/2021)

| | |
|---|---|
| சிறு தலைப்பு : | பொதுப்பணிகள் – குற்ற வழக்குத் தொடர்வுத் துறை – திருமதி. ப. தமிழ்மாலா, தட்டச்சர், குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களுக்கு – தகுதிகாண் பருவம் முடித்ததற்கு ஆணை வழங்குதல் தொடர்பாக. |
| படிக்கவும் : | 1) சென்னை தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய கடித எண் 1798/பிஎஸ்டி–எப்/2019 நாள் 20/02/2019.<br>2) இவ்வியக்கக செயல்முறை ஆணை ந.க.எண். 1420/குவதொஇ/அ2/2019–2, (இயக்கக ஆணை எண்.34/2019 ) நாள் 07/03/2019.<br>3) திருமதி. ப.தமிழ்மாலா தட்டச்சராக பணிக்கு அறிக்கை செய்த நாள் 15/03/2019<br>4) இயக்கக செயல்முறை ஆணை ந.க.எண்.1420 /குவதொஇ/அ2/2019 நாள் 0/05/2019<br>5) திருமதி. ப.தமிழ்மாலா, தட்டச்சர் விண்ணப்ப நாள் 23/08/2021 |

ஆணை :

பார்வை 1 மற்றும் 2–ல் காணும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையக் கடிதம் மற்றும் இயக்கக பணி நியமன ஆணையின்படி திருமதி ப.தமிழ்மாலா, தட்டச்சராக சென்னை குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் அலுவலகத்தில் பணி நியமனம் செய்யப்பட்டார். மேற்படி ஆணையின் படி, தனியர் 15/03/2019 முற்பகல் முதல் சென்னை குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் அலுவலகத்தில் தட்டச்சராக பணிக்கு அறிக்கை செய்து பணிபுரிந்து வருகிறார்.

2) பார்வை 4–ல் காணும் இயக்ககச் செயல்முறை ஆணையின்படி திருமதி ப.தமிழ்மாலா, தட்டச்சர், குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களது பணியினை 15/03/2019 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்தி ஆணையிடப்பட்டுள்ளது.

/2/

3) குற்ற வழக்குத் தொடர்வுத் துறையில் தட்டச்சராக பணியமர்த்தப்படுபவர்கள் அவர்களது தகுதிகாண் பருவ காலத்திற்குள் தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறைத் தேர்வில் தேர்ச்சி பெறுதல் வேண்டும். மேலும் சான்றிதழ் படிப்பான அலுவலகப் பணிகள் கணினி மயம் (Certificate course on Office Automation) தேர்வினை டிசம்பர் 2014–இல் எழுதி தேர்ச்சி பெற்றுள்ளார். தனியரது இயல்பான இரண்டு வருட பணிக்காலம் முடியும் நாள் 14/03/2021 பி.ப ஆகும். நடைமுறையில் உள்ள அரசு விதிகளின்படி, தகுதிகாண் பருவத்தில் உள்ளவர்கள் அவர்களது தகுதிகாண் பருவ காலத்தினை நிறைவு செய்வதற்குள் தற்செயல் விடுப்பைத் தவிர வேறு விடுப்புகள் துய்த்தால் தகுதிகாண் பருவ காலம் நீடிக்கும். தனியரது பணிப்புத்தகத்தை பரிசீலனை செய்ததில் தனியர் அவரது தகுதிகாண் பருவ காலத்திற்குள் எவ்வித விடுப்புகளும் துய்க்கவில்லை, எனவே தனியருக்கு தகுதிகாண் பருவம் நிறைவு செய்வதை பாதிக்கக்கூடிய வேறு காரணிகள் ஏதும் இல்லை.

4) பார்வை 5–ல் காணும் திருமதி ப.தமிழ்மாலா, தட்டச்சர், குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்களது விண்ணப்பத்தில், மேற்படி தனியர் அவரது தகுதிகாண் பருவ காலத்திற்குள் தேர்ச்சி பெற வேண்டிய தமிழ்நாடு அரசு அலுவலக நடைமுறை நூல் தேர்வினை 21/02/2021–ல் எழுதி தேர்ச்சி பெற்றுள்ளார்.

5) எனவே மேற்படி வகையிலும், அரசு விதிகளின்படியும் திருமதி ப.தமிழ்மாலா, தட்டச்சர், குற்ற வழக்குத் தொடர்வு இயக்குநர் அலுவலகம், சென்னை அவர்கள், அவரது தட்டச்சர் பதவியில் இரண்டாண்டு தகுதிகாண் பருவ காலத்தினை 14/03/2021 அன்று பிற்பகல் திருப்திகரமாக முடித்துள்ளதாக கருதி ஆணையிடப்படுகிறது.

6) மேற்படி பொருள் குறித்து தனியரது பணிப்பதிவேட்டில் பதிவு செய்யப்படும். மேலும் தனியருக்கு வழங்க வேண்டிய ஊதிய உயர்வு நிலுவைத் தொகையினையும் பெற்று வழங்கும்படியும் ஆணையிடப்படுகிறது.

15-12-2021

**இயக்குநர்,**

**கு.வ.தொ.துறை, சென்னை–5.**

15/12/21

பெறுநர்

1) திருமதி ப.தமிழ்மாலா,
தட்டச்சர்,
கு.வ.தொ. இயக்குநர் அலுவலகம்,
சென்னை – சென்னை கு.வ.தொ. இயக்குநர் மூலமாக.

நகல் சமர்பிக்கப்படுகிறது :அரசு கூடுதல் தலைமைச் செயலர்,உள்(நீ.ம.–6)துறை,
தலைமைச் செயலகம், சென்னை–9.

நகல் :அ2 இருக்கை/கோப்புக்கு/இயக்கக ஆணைப்புத்தகம்/இருப்புக் கோப்புக்கு.